# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 707 /2005

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | :Nalluchamy | Father/Husband Name: Periyapillai | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 15.02.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் மேலூர் ஜோதி நகரில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் லதா என் மகள். எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் அருண் மற்றும் ஆனந்த் ஆவார்கள். 1-வது எதிரி அருண்குமார் என் மருமகன். ஆனந்த என்பவர் 1-வதுஎதிரியின் அண்ணன். கடந்த 16.09.04ம் தேதி என் மகள் லதாவிற்கும் 1-வது எதிரி அருண்குமாருக்கும் திருமணம் செய்து வைத்தோம். திருமணத்தின்போது என் மகளுக்கு 15 பவுன் நகையும். 1-வது எதிரிக்கு ஒன்றைகால் பவுன் நகையும், ரூ.50 ஆயிரம் மதிப்புள்ள சீதனப்பொருட்களும் கொடுத்தோம். திருமணம் ஆகி 3 அல்லது 4 மாதத்திற்கு பிறகு 23.03.05ம் தேதி வரதட்சனையாக முதலில் 40 ஆயிரமும், பிறகும் 1 லட்சம் கேட்டு என் மகளை அடித்து கொடுமைப்படுத்தினார்கள். அப்போது என் மகள் 5 மாத கா்ப்பினியாக இருந்தார். என் மகளிடம் நகையை தருமாறு கேட்டு எதிரிகள் அணைவரும் சேர்ந்து என் மகளை அடித்து காயப்படுத்தியதாக கேள்விப்பட்டு திருவாதவூரில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று பார்த்தோம், மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாக கேள்விப்பட்டு மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது என் மகளை வந்து பார்த்தேன். என் மகளுக்கு வயிற்றில் மிதித்ததால் வயிற்றிலும், கை, கால் உடம்பிலும் ஊமைக்காயங்கள் இருந்தது. நான் என் மகளிடம் விசாரித்தபோது வெளிநாடு செல்லவேண்டும் நகையை கொடு என்று கேட்டு எதிரிகள் என் மகளை அடித்து காயப்படுத்தியதாக சொன்னார். அன்றையதினமே (23.03.05) என் மகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். என்னிடம்

காட்டப்படும் புகார் என் மகள் லதா கொடுத்தது. அதில் உள்ள கையெழுத்து என் மகளின் கையெழுத்து. அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். என் மகள் மருத்துவமனையில் ஒருவாரகாலம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

எதிரிகளின் தாயார் பெயர் என்ன என்றால் காந்தியம்மாள். அவர் என் உடன் பிறந்த சகோதரி என்றால் ஆமாம். ஆஜர் எதிரிகளுக்கு நான் தாய்மாமன் என்றால் சரிதான். நான் என் ஊரில் கௌரவமான குடும்பத்தை சேர்ந்தவன் என்றால் சரிதான். போதுமான சொத்து உள்ளது என்றால் 2 ஏக்கர் சொத்து உள்ளது. எதிரிகளும் அவர்கள் ஊரில் கௌரவமான குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் இருக்கலாம். 1-வது எதிரி உடன்பிறந்தவர்கள் 3 மற்றும் 4வது எதிரிகள் என்றால் சரிதான். 4-வது எதிரி உதயநிதியை சிவகங்கை மாவட்ட கீழக்கோட்டையில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ( அவரது கணவவர் வெளிநாட்டில் இருந்ததால் திருவாதவூரில் அவர் குடியிருந்தார். ) 1, 3, 4 வது எதிரிகளின் திருமணத்தில் நான்தான் தாய்மாமன் முறை செய்தேன் என்றால் 1வது எதிரியின் திருமணத்தல் மட்டும் கலந்துகொண்டேன்.3, 4 எதிரிகளின் திருமணத்தில் நான் கலந்துகொள்ளவில்லை. அருண்குமார் திருமணத்திற்கு முன்பே 3 மற்றும் 4வது எதிரிகளுக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். 2-வது எதிரி காந்தியின் திருமணத்திற்கு என்ன சீர்வரிசை செய்தோம் என்றால் அது என் அம்மா அப்பா செய்தார்கள் எனக்கு எதுவும் தெரியாது. காந்தியின் திருமணத்தில் நான் கலந்துகொண்டேனா என்றால் நான் அப்பொழுது சின்ன பையன் கலந்துகொண்டேன். 1-வது எதிரி மற்றும் என் மகளின் திருமணத்திற்கு நான் என் மகளுக்கு 15 பவன் நகை மற்றும் சீர்வரிசை அவர்கள் கேட்டுக்கொடுத்தேனா இல்லை நானாக கொடுத்தேனா என்றால் அவர்கள் கேட்டத்தான் கொடுத்தேன். 15 பவுன் நகை என் மகளுக்கும் ஒன்றைகால் பவுன் மைனர் செயினும் செய்தேன். என்னிடம் 1-வது எதிரிக்கு என் மகளை கேட்டது யார் என்றால் 2-வது எதிரி மற்றும் முருகன், காந்தி, சம்பத், சேது ஆகியோர்கள் கேட்டனர். பொதுவாக எங்கள் சமூகத்தில் வரதட்சனை கேட்பதும், கொடுப்பதும் வழக்கம் இல்லை என்றால் சரியல்ல. நானாக பிரியப்பட்டு என் மகளுக்கு கொடுக்கும் சீர்வரிசை மட்டும்தான் வரதட்சனை என்றால் சரியல்ல. என் மகள் என்னைபோல் உயரம் மற்றும் சிவப்பாகவும், அழகாகவும் இருப்பார் என்றால் சரிதான். 1-வது எதிரி என் மகளுக்கு ஏற்ற தகுதியான மாப்பிள்ளை இல்லை என்றால் தகுதியான

மாப்பிள்ளை என்றுதான் கொடுத்தோம். என்னுடைய கடுமமையான முயற்சியால்தான் திருமணம் நடந்தது என்றால் இருதரப்பிலும் முயற்சி செய்துதான் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு என் மகள் எத்தனை முறை என் வீட்டிற்கு சண்டைபோட்டு வந்தார் என்றால் பலமுறை 1 லட்சம் பணமும், 10 பவுன் நகை அதிகம் கேட்டு கொடுமைப்படுத்தியதால் வந்துள்ளார். மாறன் காவல் துணை கண்காணிப்பளாரின் அறிவ்ுரையின்படி 1-வது எதிரி மற்றும் என் மகளை மேலூர் சொக்கம்பட்டியில் தனியாக குடி அமர்த்தப்பட்டார்கள் என்றால் சரிதான். சொக்கம்பட்டியில் எத்தனை மாதம் குடியிருந்தார்கள் என்றால் 6 மாதம் இருந்தார்கள். என்னுடைய கோரிக்கைகள் அனைத்தையும் 1-வது எதிரி கேட்டுக்கொண்டு நடைமுறைப்படுத்தினார் என்றால் என்னுடைய கோரிக்கையல்ல, துணை கண்காணிப்பாளர் மாறனின் அறிவுரையை கேட்டுக்கொண்டார். எனது மற்றொரு பெண்ணை எங்கு திருமணம் செய்துகொடுத்துள்ளேன் என்றால் கீழையூர். அவரது திருமண வாழ்க்கையில் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். அந்த மகளையும் எனது உறவினருக்குத்தான் திருமணம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் தூரத்து உறவு. நான் உறவுமுறையை பலப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் என் அக்கா மகனுக்கு என் மகளின் விருப்பமில்லாமல் திருமணம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. என் மகளின் 5 மாத கர்ப்பம் என்ன ஆனது என்றால் என் மகள் கர்ப்பமாக இருக்கும்போதே இறந்துவிட்டார். என் மகள் எந்த தேதியில் இறந்தார் என்றால் 20.09.07ம் தேதி. மீண்டும் சாட்சி 16.09.2009 என்று கூறுகிறார். எதிரிகள் என் மகளை வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்தவோ, அடித்து காயம் ஏற்படுத்தவோ, மிரட்டவோ இல்லை என்றால் சரியல்ல. வரதட்சனை கேட்டுதான் கொடுமைப்படுத்தினார்கள். எதிரிகளுக்கும் புகாருக்கும் சம்மந்தமில்லை என்றாலும், பொய்யாக எதிரிகள்மீது கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 707 /2005

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | :Prabu | Father/Husband Name: Nalluchamy | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 15.02.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் மேலூர் ஜோதி நகரில் வசிக்கிறேன். ஒர்க்ஷாப் நடத்தி வருகிறேன். அ.சா.1 என் அப்பா. இவ்வழக்கின் புகார்தாராரான லதா என் தங்கை. 1-வது எதிரி அருண்குமார் என் தங்கையின் கணவர். 2-வது எதிரி காந்தி, என் தங்கையின் மாமியார். 3-வது எதிரி ஆனந்த் 1-வது எதிரியின் அண்ணன். 4-வது எதிரி உதயநிதி என் தங்கையின் நாத்தனர். ஆஜர் எதிரிகள் அருண்குமார் மற்றும் ஆனந்த் ஆவார்கள். கந்த 16.09.04ம் தேதி என் தங்கைக்கும் 1-வது எதிரிக்கும் மேலூர் சிவன்கோயிலில் வைத்து திருமணம் செய்து வைத்தோம். திருமணத்தின்போது என் தங்கைக்கு 15 பவுனும், 1-வது எதிரிக்கு ஒன்றைகால் பவுன் நகையும் மற்றும் சீதனப்பொருட்களும் கொடுத்தோம். திருமணத்திற்கு பிறகு 3 அல்லது 4 மாதங்களில் ரூ.40 ஆயிரம் கேட்டு எதிரிகள் என் தங்கையை அடித்து காயப்படுத்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். மீண்டும் நன்றாக வைத்துக்கொள்கிறோம் என்று கூறி என் தங்கையை அழைத்துச்சென்றார்கள். பிறகு 6, 7 மாதங்கள் கழித்து வெளிநாடு செல்லவேண்டும் என்று 1 லட்சம் ரூபாய் கேட்டு கொடுக்காவிட்டால் நீ உங்கள் வீட்டில்போய் வாழாவெட்டியாக இருக்கவேண்டும் என்று கூறினார்கள். என் தங்கையின் நாத்தனாரை சிவகங்கையில் திருமணம் செய்துகொடுத்து அவரது கணவர் வெளிநாட்டில் இருப்பதால் என் தங்கையின் வீட்டிற்கு பின்புறம் ஒத்திக்கு வீடு பிடித்து குடியிருந்து வருகிறார். அவர் நாத்தனார் தங்கையிடம் என் தம்பி கேட்பதை நீ கொடுத்தால்தான் உன்னை ஒழுங்காக வைத்துக்கொள்வான் என்று கூறினார். பிறகு 1 லட்சம் ரூபாய் பணம் கேட்டு

எதிரிகள் அனைவரும் சேர்ந்து என் தங்கையை அடித்து ஊமைக்காயம் ஏற்படுத்தி வயிற்றில் வலி இருந்தது. முன்பக்க மேல்பல் பாதி உடைந்திருந்தது. அதன்பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். பிறகு நான் வெளிநாடு சென்றுவிட்டேன். அப்போது என் தங்கை இறந்துவிட்டார், அதுபற்றி எனக்கு தெரியாது. புகார் கொடுத்தபோது போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைத்தான் நான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம். ஆஜர் எதிரிகள் இருவரும் என் மைத்துனர்கள் என்றால் என் தந்தையின் சொந்த அக்கா மகன்கள். என் தங்கைக்கும் எதிரிகளுக்கும் இடையே எத்தனைமுறை பிரச்சனை ஏற்பட்டது என்றால் நான் வெளிநாடு செல்வதற்கு முன்புவரை 2 முறை பிரச்சனையால் என் தங்கை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அண்ணன் என்ற முறையில் என் தங்கைக்கும் எதிரிகளுக்கும் எற்பட்ட பிரச்சனையில் யார் மூலமாவது சமரசம் செய்து வைக்க பேசினோமா என்றால் பேசினோம். யார் யார்மூலம் பேசினோம் என்றால் அது என் தந்தைக்குத்தான் தெரியும் நான் கலந்துகொண்டேன். எதிரிகளுக்கு காரைவீடு உள்ளத என்றால் சரிதான். சொந்த நிலங்கள் உள்ளது என்றாலும் சரிதான். 4-வது எதிரி உதயநிதி வசதியான வீட்டில்தான் திருமணம் செய்து கொடுக்கப்பட்டள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2-வது எதிரி ஆனந்தும் வெளிநாட்டில் வேலை செய்தவர் என்றால் சரிதான், நானும் அவரும் நாட்டில்தான் வேலை செய்தோமா என்றால் நான் கல்ப், அவர் சிங்கப்பூர். திருவாதவூர் சமத்துவபுரம் எதிரே எதிரிகளுக்கு சொந்தமாக ஒரு வணிகவளாகம் உள்ளத என்றால் அதன் பின்புறத்தில் எதிரிகளுக்கு சொந்தமான வெல்டிங்க தொழிற்சாலை உள்ளத என்றால் தெரியாது, என் தங்கை திருமணத்தின்போது இவைகள் கிடையாது. திருவாதவூர் திரௌபதியம்மன் கோயிலுக்கு அருகில் ஒரு பஞ்சர் கடை வெட்டிங்க ஓர்க்ஷாப் எதிரிகளுக்கு இருந்தது தெரியுமா என்றால் என் தங்கை திருமணத்தின்போது அங்கு ஒரு வாடகை கடையில் வெட்டிங் ஓர்க்ஷாப் வைத்திருந்தார். பொதுவாக சிங்கப்பூரில் எவ்வளவு மாத சம்பளம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வெளிநாட்டில் எவ்வளவு சம்பளம் பெற்றேன் என்றால் மெக்கானிக்காக வேலை செய்ததால் மாதம் 25 ஆயிரம் ரூபாய். பொக்லைன் இயந்திரங்கள், மண்வெட்டி பழுது செய்துவரும் தொழில் எதிரிகள் செய்து வந்தார்கள் என்றால் என் தங்கையின் திருமணத்தின்போது

அது கிடையாது. என் தங்கை மற்றும் மைத்துனருக்கும் என்ன பிரச்சனை என்று அவர்களை மருத்துவரிடமோ, கவுன்சிலிங் கொடுக்கப்பட்டதா என்றால் அவர்களிடையே பிரச்சனையே வரதட்சனை கொடுமைதான், எதிரிகள் என் தங்கையிடம் எந்தவித வரதட்சனையும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. உறவுகள் விட்டுப்போகக்கூடாது என்பதால் திருமணம் செய்து வைத்ததால் அதனால் ஏற்பட்ட விளைவுதான் அனைத்தும் என்றால் சரியல்ல. எதிரிகள் புகார்தாரரை கொடுமைப்படுத்தவோ, வரதட்சனை கேட்கவோ, அடித்து காயம் ஏற்படுத்தவோ, மிரட்டவோ இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்னதுபோல் எந்தவித காயமும் புகார்தாரருக்கு ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 707 /2005

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | :Alagu | Father/Husband Name: Muthukaruppan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 15.02.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கோட்டநத்தம்பட்டியில் வசிக்கிறேன். நான் வீட்டில்தான் இருக்கிறேன். அ.சா.1-ஐ எனக்கு தெரியும். அவரது மகள் புகார்தாரர் லதாவை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. சம்பவம்பற்றி எனக்கு துவும தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக அரசுதரப்பில் மாறுதல் செய்ய கேட்டு அனுமதிக்கப்படுகிறது.)

குறுக்கு விசாரணை: அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் அ.சா.1-ன் மகள் லதாவிற்கும் 1-வது எதிரி அருண்குமாருக்கும் திருமணம் நடந்து திருமணத்தின்போது 15 பவுன் பெண்ணிற்கும், ஒன்றைகால் பவுன் நகை மாப்பிள்ளைக்கும் கொடுத்து வீட்டு உபயோகப்பொருட்களை சீதனமாக கொடுத்து திருமணம் நடந்ததாக கேள்விப்பட்டேன் என்றும் பின்னர் 23.03.05ம் தேதி மாலை 5 மணிக்கு நானும் அ.சா.2 பிரபுவும் இருசக்கர வாகனத்தில் திருவாதவூர் சென்று பிரபுவின் தங்கை லதாவின் வீட்டிற்கு சென்றிருந்தபோது அங்கு ஒரே சத்தமாக இருந்தது என்றும், என்னவென்று பார்த்தபோது லதாவின் கணவர் அருண்குமார் குடித்துவிட்டு வந்து லதாவின் கழுத்தில் அணிந்திருந்த நகைகளை கேட்டு தகராறு செய்து அவர் தர மறுத்ததால் அவரை அடித்து கீழே தள்ளிவிட்டு அவர் வயிற்றில் காலால் மிதித்ததாகவும், அப்போது அவர் கழுத்திலிருந்த நகையை அத்து அது கீழே விழுந்ததாகவும், அதை எதிரி ஆனந்த் என்பவர் எடுத்து பையில் போட்டுக்கொண்டார் என்றும், பின்னர் லதாவின் மாமியார் லதாவின் கண்ணத்தில் அடித்தார் என்றும், மாமியார்

லதாவை பார்த்து மண்ணெண்ணெய் கேனை எடுத்து கொளுத்த வந்தார் என்றும், அப்போது அவரது நாத்தனார் ஆன உதயநிதி என்பவர் தீப்பெட்டியை எடுத்து கொளுத்தச்சொன்னார் என்றும் அப்போது வீட்டைவிட்டு வெளியே வந்த லதாவை நானும் பிரபுவும் அழைத்துச்சென்று மருத்துவமனையில் சேர்த்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு சாதகமாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.